# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

**தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி லொக்குகே அவர்களால் 2023, திசெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, திசெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *225 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம்**
**(கூட்டிணைத்தல்)**

## தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

''தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டு நடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண் ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்கு மாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம் கூட்டிணைத்தல்

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் ''மன்றம்'' என குறிப்பீடு செய்யப்படும்) தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றம்'' என்னும் பெயரின் கீழும், மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட

கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக் கவும், பயன்படுத்தவும் அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள் கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது:-

(அ) முன்பள்ளி மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய கல்வியை வழங்கல்;

(ஆ) இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் எவ்வித மத வேறுபாடுமின்றி மாணவர்களிடையே நல்ல செயல் களையும் பண்புகளை வளர்க்கும் நோக்கில் ஆன்மீக அறிவை விருத்திசெய்தல்;

(இ) வெவ்வேறு சமுதாயங்களிலுள்ள விசேட அவசியமுள்ள மந்தபோஷணையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இனங் கண்டு அவர்களுக்கு அவசிய போஷணைகளை வழங்கி அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு கைகொடுத்தல்; மற்றும்

(ஈ) மேற்படி குறிக்கோள்கள் அல்லது அவற்றில் சிலவற்றை நிறைவேற்ற அவசிய அனுசரணை அல்லது செய்ய வேண்டிய அனைத்தையும் செயற்படுத்தல்.

கூட்டுத் தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையாதல் வேண்டும்.

(அ) நிதிகளைத் திரட்டலும் அல்லது காசாக அல்லது பொருளாக அல்லது கொடைகள், பரிசில்கள் மற்றும் நன்கொடைகளாகப் பெறுதலும்;

(ஆ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை எவ்வகையிலும் உரித்தாக்க, வைத்திருக்க குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறவோ அல்லது கொடுக்கவோ, விற்க அல்லது வேறுவகையில் கையுதிர்க்க மற்றும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களுக்கு அவசியமான அல்லது வசதிகளுக்காக ஏதேனும் கட்டிடங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் அமைக்க, பரிபாலிக்க அல்லது அவைகளை மாற்றம் செய்வதற்கும்;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும் ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும் அல்லது வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும் முடிவுறுத்தலும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப் பின்றி கடன் பெறுதல் அல்லது பெற்றுக்கொள்ளல்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காக உடனடித் தேவைப் படாத ஏதேனும் நிதிகளை முகாமைச் சபை தீர்மானிக்கக் கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கூட்டிணைக்கப் பட்ட யாராவது ஒருவருடன் அல்லது குழுவுடன் அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஏதாவது திணைக்களம், கூட்டுத்தாபனம், சபை, மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற நிறுவனமொன்றுடன் உடன்படிக் கைகள் அல்லது ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்;

(ஊ) உறுப்பாண்மை வகைப்படுத்தும் நோக்குடன் அதற்காக பதிவு செய்வதற்காக செலுத்தவேண்டிய தொகையை தீர்மானித்தலும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், பதவி நீக்குதல் அல்லது பதவியை வறிதாக்குதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கக்கூடிய சம்பளங்கள், கொடுப்பனவுகள், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்.

கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**5 .** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம், உப தவிசாளர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக் கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட ஏழு பேருக்கு குறையாத பணிப்பாளர் சபையொன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் விதிகள்

**6 .** (1) உறுப்பினர்களை அனுமதித்தல், அவர்கள் பதவி நீங்குதல் அல்லது விலக்குதல் தொடர்பாக முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக பதவி தாங்குநர்களின், பிரதிநிதிகளின் மற்றும் சேவையாளர்களின் அலுவல்களை செயற்படுத்திச் செல்லும்போது கடை பிடிக்க வேண்டிய நடவடிக்கைமுறைகளும், கூட்டுத்தாபனத்தின் மற்றும் முகாமைக்குழுவின் அலுவல்களை கொண்டு நடாத்திச் செல்ல கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைத்துவப்படுத்தவும் மற்றும் அதன் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு,

பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக் காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள், விதி யொன்று ஆக்கப்படுவதைப்போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் நிதியம்

**7.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகால வரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் நோக்கங்களை நிறைவேற்றும் போது கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனங்கள் எவ்வாறு பெறப்படினும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் முகமாக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் பங்கிலாபம், உபகாரக் கொடுப்பனவு வேறு ஏதேனும் வகையான இலாபம் ஒன்றாக கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனங்களில் இருந்து ஏதேனு மொரு பகுதியை கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, செலுத்தவோ அல்லது சாட்டுதல் செய்தலோ ஆகாது.

கூட்டுத் தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபைத் தீர்மானத்தின்படி தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத் தாபனத்தின் இலச்சினை

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது செயலாளர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தினால் செலுத்தப்படற் பாலனவும், கூட்டுத்தாபனத் திற்குச் செலுத் தப்படற்பாலன வுமான கடன்கள்

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்பட வுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத் தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம் என்பது

**11.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின் கீழ் அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரிதாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சி யிருக்கின்ற ஆதனங்கள்

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது

நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது அல்லது நிறுவனங்களானது, கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தின் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளவரின் மற்றும் அவரினால் அவரது அல்லது அவரின் கீழ் உரிமைகோருபவர்களைத் தவிர இலங்கை குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் மற்றும் ஏனையோரினதும் உரிமைகளையேனும் இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏதாவதொன்றினால் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.